# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECONDD YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## PSC 2.11 – CONSTITUTIONAL DEVELOPMENT IN SRI LANKA

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "கருத்தொருமைப்பாடற்ற நிலையில் உருவாக்கப்படும் அரசியல் திட்டங்கள் நீண்டகாலம் நிலைத்திருப்பதில்லை." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி ஆராய்க. (20 புள்ளிகள்)

02. இலங்கையின் தேசிய இயக்கச் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்திப் பின்வருவனவற்றை பரிசீலிக்குக.
    - (I) பௌத்த மதப்புணருத்தான இயக்கம் (07 புள்ளிகள்)
    - (II) இலங்கை தேசிய காங்கிரஸ் (07 புள்ளிகள்)
    - (III) தொழிற் கட்சி (06 புள்ளிகள்)

03. "டொனமூர் அரசியல் திட்டம் இலங்கையின் சுதந்திரத்திற்கும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலானதொரு பாலமாகும்" இக்கூற்றினை விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக. (20 புள்ளிகள்)

04. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியல் திட்டத்தினை பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.
    - (I) பாராளுமன்றத்தின் இறைமை (07 புள்ளிகள்)
    - (II) பிரதமரும் மந்திரி சபையும் (07 புள்ளிகள்)
    - (III) 29 வது சரத்து (06 புள்ளிகள்)

05. இலங்கை முதலாவது குடியரசு அரசியல் திட்டத்தில் தேசிய அரசுப் பேரவையினை மீயுயர் தாபனமாக்கிய ஏற்பாடுகளை விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக. (20 புள்ளிகள்)

06. "ஜனநாயக மூலக்கொள்கைகளின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட ஓர் உயர் நிறுவனமே 1978 ஆம் ஆண்டைய அரசியல் திட்டத்தின் ஜனாதிபதிப் பதவியாகும்" இக்கூற்றினை இலங்கை ஜனாதிபதியின் தெரிவு, அதிகாரங்கள் மற்றும் தற்காலச் செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க. (20 புள்ளிகள்)

07. இலங்கையின் நீதி நிர்வாகத்தின் வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றை விளக்குக.

(I) கெமறனின் நீதிபரிபாலன ஆலோசனைகள் (07 புள்ளிகள்)

(II) 1947 ஆம் அரசியல் திட்டத்தின் கீழ் நீதிமன்ற கட்டமைப்பு (07 புள்ளிகள்)

(III) தற்போதைய உயர் நீதிமன்றம் (06 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்புக்கள் தருக.

(I) இலங்கையில் மனித உரிமைகள்

(II) இலங்கையின் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

(III) விகிதாசாரத் தேர்தல் முறையின் பலங்களும் பலவீனங்களும்

(IV) மக்கள் தீர்ப்பு

(10X2 = 20 புள்ளிகள்)